***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 83/2018**

P.W.1 மனீஷா த/பெ.செந்தில்குமார் நாள் – 13.08.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

25.09.2024 அன்று குறுக்கு விசாரணையில் 5–ம் பிரதிவாதி சுப்புலெட்சுமிக்கு அறிவிப்பு அனுப்பியதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக குறிப்பிட்டிருந்தேன், அந்த ஆவணத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. 2447/2013 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக குறிப்பிட்டிருந்தேன், அந்த ஆவணத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன் . நான் இவ்வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . அந்த ஆவணத்தை 3ம் பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்தை விற்று தான் B அட்டவணை சொத்தை வாங்கினோம் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்தில் 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . எனது தந்தையார் செந்தில்குமார் சர்வே எண் .364/2 விற்றுள்ளார் என்றால் இல்லை . சர்வே எண்.365/3 சொத்தை 1–ம் பிரதிவாதிக்கு என் தந்தையார் விற்றுள்ளார் என்றால் இல்லை. என் தகப்பனார் , துரைமாணிக்கம், செல்வராஜ், மீனாட்சி, ராதாகிருஷ்ணன், பாலகிருஷ்ணன், 1–ம் பிரதிவாதி ஆகியோர்களுக்கு 5–1/4 ஏக்கருக்கு மேல் விற்றுள்ளார் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் சுமார் 10–11 ஏக்கருக்குள் இருக்கும். ஏற்கனவே என் தகப்பனார் 5–1/2 ஏக்கர் சொத்தை விற்றதற்கு பின்னிட்டு, அதில் பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றால்

சரியல்ல.15.04.2002 ல் என் தாத்தா உயிருடன் இருந்த காலத்திலேயே எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பா மூர்த்திக்கும் பாகம் பிரிக்கப்பட்டு அதனை தனித்தனியே அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை . சர்வே எண்.173 விஸ்தீர்ணம் 32 சென்ட் இந்த வழக்கில் காண்பிக்கவில்லை என்றும் , அது எங்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல, அது நத்தம் சொத்தாக இருப்பதால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்பதால் சேர்க்கவில்லை . அது நத்தம் சொத்து அல்ல என்றும் , அது குப்புசாமி பெயரில் உள்ள சொத்துக்கள் என்றும் சொன்னால் தெரியாது . சர்வே எண் .363/1, 364/2B, 264/2C, 374/2A ஆகிய சொத்துக்களை பொறுத்து தஞ்சாவூரை சேர்ந்த பிரபு என்ற நபரிடம் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கிரய உடன்படிக்கை ஏற்பட்டு அவர் அனுபவம் மற்றும் அவரது பராமரிப்பில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது . மேற்கண்ட சொத்தைப் பொறுத்து புதுநகர் இந்தியன் வங்கியில் வைப்பீடு செய்யட்டு இருந்த நிலையில், மேற்கண்ட கடனை பிரபு தீர்த்ததால் தான் கிரய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . 2015–2016 ல் பொதுப்பாதை மற்றும் பம்புசெட் ஆகியவற்றிற்கு பணத்தை பெற்றுக்கொண்டு எங்களுக்குள் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்டது என்றால் இல்லை . இது சம்மந்தமாக என் அம்மா கைப்பட எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை . இவ்வழக்கு விவரத்தையும், வழக்குமூலத்தையும், சொத்து விவரத்தையும் மற்றும் சொத்தைப் பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களும் , தற்போது நடைமுறையில் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல . எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 5–ம் பிரதிவாதியை குறிப்பிடாமல் தற்போது வழக்கில் அவருக்கு பாகம் உண்டு என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல . குடும்ப சொத்தில் என் அப்பாவின் நடவடிக்கையும் , பெரியப்பாவின் நடவடிக்கையும் சரியில்லாததால் சொத்தை பொறுத்து ஒரு பகுதியை 2–ம் பிரதிவாதிக்கும், மீதி பகுதியை எனது தகப்பனாருக்கு ஒதுக்கி எழுதிக்கொடுக்காமலும் உள்ளது என்றால் அப்படி எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. எழுதிக்கொடுக்காமல் ஒதுக்கிய சொத்தை

என் தகப்பனார் விற்றுவிட்டார் என்றால் இல்லை . என் அப்பாவிற்கும் , பெரியப்பாவிற்கும் முறைப்படி பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதால், அதில் நான் பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல . என் தாத்தா எழுதி வைத்த உயில் ஆவணம் செல்லாது என்று சொல்ல எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு பாகம் வேண்டுமென்று கேட்கவேண்மென்றால் என் தாத்தா பெயரில் உள்ள உயில் சொத்துக்களை தவிர வீட்டில் உள்ள பாகம் மட்டும் பெற தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*